RECEIVED
1980-7-29
PERIODICALS DIVISION
UNIVERSITY OF JAFFNA CAMPUS LIBRARY

பக்கங்கள் 8

ஈழநாடு
50 சதம்
The EELANAADU

மலர் 22 ஆடி 14 ரமழான் 16 இதழ் 169
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-7-80

மன்னாரில் எண்ணெய் ஆய்வு: அமெரிக்க கம்பனி மேற்கொள்ளும்

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவியுடன் மன்னாரில் எண்ணெய் வள அகழ்வு வேலைகளை மேற்கொள்ளவுள்ளது.

இங்கு எண்ணெய் கிடைக்குமானால் வருமானத்தில் 40 சதவீதம் அமெரிக்க சிற்றி சேர்விஸஸ் என்ற ஸ்தாபனத்துக்கு வழங்கப்படும். இதற்கான ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படும். அகழ்வு வேலைகளுக்கான முழுச்செலவையும் இந்நிறுவனமே பொறுப்பேற்றுள்ளது (கு)

பிரதமர் 'பிரேமா' இன்று

வடபகுதி விஜயம்!

முதல் வருகையையொட்டி முல்லையில் பொதுவரவேற்பு

(முல்லைத்தீவு)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று காலை முல்லைத்தீவிற்கு வருகிறார். பிரதமர் பதவியேற்றுக் கொண்டபின்னர் வடபகுதிக்கு அவர் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

பிரதமர் திரு. பிரேமதாஸாவை சிறப்பான முறையில் வரவேற்பதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு பட்டினசபையும் சமூகசேவை நிறுவனங்களும் ஏற்பாடு செய்துள்ளன.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று காலை 8 மணிக்கு விசேஷ ஹெலிகொப்டர் விமானமூலம் வந்திறங்கும் பிரதமரை மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் மஃரூப், அரசாங்க அதிபர் ஆகியோர் வரவேற்பார்கள். கல்லூரி மைதானத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டு முல்லைத்தீவு தபாலகத்தைச் சென்றடையும் பிரதமர் தபால் நிலையம் தரமுயர்த்தப்படும் விழாவில் கலந்து கொள்வார். பின்னர் வற்றாப்பளை அம்மன் கோவிலில் நடக்கும் விசேஷ பூசையில் கலந்து கொள்வார்.

முல்லைத்தீவுக் கச்சேரியில் அபிவிருத்தி தொடர்பான மாநாடு மாலை பிரதமர் தலைமையில் நடைபெறும். இம்மாநாட்டில் முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பி உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொள்வார்கள். இம்மாநாட்டைத் தொடர்ந்து கச்சேரி வளவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுவார். [கு]

செப்டம்பரில் கிழங்கு இறக்குமதி

[கொழும்பு]

உருளைக்கிழங்கு செப்டம்பர் மாதத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்று வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதத்திலிருந்தே இறக்குமதி செய்யப்படவிருந்தபோதிலும் கிழங்கின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [கு]

ஷாவின் சடங்குகளில் நிக்ஷன்

கெய்ரோ, ஜூலை, 29

காலஞ்சென்ற முன்னாள் ஈரானிய மன்னர் ஷாவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளும் பொருட்டு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு நிக்ஷன் வாஷிங்டனிலிருந்து கெய்ரோ வந்துசேர்ந்தார்.

காலஞ்சென்ற ஷாவின் இறுதிச் சடங்குகள் இன்று அரசமரியாதைகளுடன் கெய்ரோவில் நடைபெறும். [ர]

மதுவின் தீமைகளை விளக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி பழையமாணவர் சங்கம் நடத்தும் "மதுபானத்தை அளவுக்கதிகமாக அருந்துவதினால் ஏற்படும் தீமைகள்" பற்றி பொதுமக்களுக்கு விளக்கும் கருத்தரங்கொன்று ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென்ற் றிக்ஸ் வீதியிலுள்ள பற்றிசியன் மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பிரபல டாக்டர்களும், பிரமுகர்களும் உரையாற்றுவர். இக்கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை பற்றி சங்கத்தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. லீவிப் மேற்கொண்டுள்ளார். [கு]

இதற்குமட்டும் ஒரு கால்வாயா?

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு நாவலர் வீதியிலிருந்து செல்லும் ஸ்ரீ வெங்கடேசர் வீதியில், இந்த நிஷ்டம் மழையால் முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கிவிடும்.

இந்நீர் அங்கு தேங்காமல் கால்வாய் அமைக்கும்படி யாழ் நகர மேயரிடமும் உறுப்பினர்களிடமும் பலமுறை இவ்வீதியில் வசிப்பவர்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எதுவித பலனுமில்லை. ஆனால் இவ்வீதியில் குறித்த சில யார் தூரத்தில் கடையிற்சாமி ஒழுங்கையில் தனியார் பங்களா ஒன்றிலிருந்து வெளியேறும் கழிவுநீரை நாவலர் வீதியிலுள்ள கால்வாயுடன் இணைப்பதற்கு புதிதாக கால்வாய் ஒன்றை யாழ். மாநகரசபை அமைத்து வருவதையிட்டுப் பொதுமக்கள் பலரும் புகார் தெரிவிக்கின்றனர்.

பஸ் விபத்தில் 7 வயதுப் பாலகன் துடிதுடித்து மரணம்

[மட்டுவில்]

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த ஏழு வயதுப் பாலகன் இ. போ. ச. பஸ் ஒன்றினால் மோதுண்டு ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமான இப்பரிதாப சம்பவம் சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த [illegible] என்ற ஏழு வயதுப்பாலகன் பாடசாலையிலிருந்து வீடுதிரும்பிக்கொண்டிருக்கும்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இப்பரிதாப சம்பவம் நடைபெற்றது.

சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று புலன் விசாரணை நடத்தினர். சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி திரு என் தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினார். சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டபின் விபத்து மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

இ. போ. ச சாரதியை பொலிசார் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்தனர். நீதிபதி சாரதியைப் பிணையில் செல்ல அனுமதியளித்தார். (வ)

சூறாவளிக்கு 188 பேர் பலி

ஹொங்கொங், ஜூலை 28

தென்சீனாவின் குவாண்டங் மாகாணத்தில் வீசிய பயங்கர சூறாவளிக்கு 188 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

26 ஆண்டுகளில் வீசிய பயங்கர சூறாவளி இதுவே என்றும் தெரிவிக்கப்பட்டது. [ர]

உலகத்தமிழர் பண்பாட்டு

இயக்க மாநாட்டுக்கு கனகரத்தினம் செல்கிறார்

மொரிஷியஸ்தீவில் ஆக. 4-ல் மாநாடு ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

மொரிஷியஸ் தீவில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் இந்த வாரத்தில் அங்கு புறப்பட்டுச் செல்லவிருக்கிறார்.

மொரிஷியஸ்தீவில் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 2வது மாநாடு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி தொடக்கம் 8ம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக மேற்படி இயக்க நிறுவனரும் பொதுச் செயலாளருமான திரு. கனகரத்தினம் கலந்து கொள்வார். மொரிஷியஸ் தீவின் போர்ட் லூயிஸிலுள்ள மகாத்மா காந்தி நினைவு மண்டபத்தில் இந்த மாநாடு நடைபெறும். மொரிஷியஸ் பிரதமர் சேர் ஸீவ்சாகர் ராம்கூலம் விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

மகாநாட்டில் திரு. கனகரத்தினம் இயக்கத்தின் இலட்சியங்களை விளக்கி உரையாற்றவிருக்கிறார்.

இந்த மகாநாட்டுக்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் தென்னாபிரிக்கா, இந்தியயூனியன் நாடுகளுக்கும் அவர் செல்லவிருக்கிறார். இந்நாடுகளிலுள்ள தமிழர்களுக்கு வழங்கவும், போட்டுக் காட்டவுமென தேவாரம் திருவாசகம் பக்திப்பாடல்கள் நாட்டுக்கூத்துப் பாடல்கள் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்களையும் தம்முடன் எடுத்துச் செல்ல திரு கனகரத்தினம் விருப்பம் தெரிவித்துள்ளார். இவ்வாறான ஒலிப்பதிவுநாடாக்களை கொடுத்துதவ விரும்புகிறவர்கள் தெல்லிப்பழை குரும்பசிட்டியிலுள்ள "தமிழகம்" இல்ல முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

காவலூர் கடற்கோட்டை நவீன சுற்றுலா விடுதியாகும்

யாழ். கோட்டையும் புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டை புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன் ஊர்காவற்றுறையிலுள்ள கடற்கோட்டையும் நவீன வசதிகளைக் கொண்ட சுற்றுலா விடுதியாக்கப்படவுள்ளது.

தொல்பொருள் திணைக்களப் பிரதி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அர[illegible] யோகேந்திரா துரைசாமி [illegible] இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை பழமைபோல் புனரமைப்புச் செய்யப்படுவதால் கோட்டைமதில் சுவர்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதாகவும், அதனால் அந்தக் கோட்டையின் அழகே அழிந்துவிட்டதாகவும் யாழ் நகரை அழகுபடுத்தும் கோட்டை அசிங்கமாகக் காட்சியளிப்பதால் யாழ் நகரின் அழகே குறைந்துவிட்டதாகவும் திரு. யோகேந்திரா அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து அது புனரமைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறைக் கடற் கோட்டையையும் [illegible] கோட்டை புனரமைப்புச் செய்து நவீன வசதிகளைக் கொண்ட அறைகளையும் பூங்காவையும் அமைப்பதன்மூலம் அக்கோட்டையை உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய சுற்றுலா விடுதியாக மாற்றியமைக்கலாமெனச் சுட்டிக் காட்டப்பட்டதை தொடர்ந்து அதுவும் சுற்றுலாவிடுதியாக்கப்படவுள்ளது" [வெ-த]

வரி விளம்பரம்

பயிற்சி

தற்போது ஆரம்பமாகி இரண்டு வகுப்புகள் நடைபெறுகின்றன. மீண்டும் புதிய வகுப்புகள் 1-8-80 இல் ஆரம்பமாகின்றன. ரேடியோ-டெலிவிசன் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி, ஏயர்-கொண்டிசனிங் (Air Conditioning & Refrigeration) இரண்டுமாத டிப்ளோமா பயிற்சி, வெல்டிங் ஒருமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புகள். விபரங்களுக்கு "நாஷனல் கிக்டம்". 11. மொம்சைக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6402

விற்பனைக்கு

நெல்லியடி கொடிகாமம் பிரதான வீதியில் புதுத் தோட்ட ஒழுங்கையில் 2½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம், க. குமாரசாமி, இந்துக்கல்லூரி வீதி, சரசாலை, சாவகச்சேரி. 6411

மின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில்

மரண சாதனம் எதையும் நிறைவேற்றாது இறந்த வவுனிக்குளம் — சம்சாரப் பிள்ளை அருணாசலம் அவர்களின் மரணச் சொத்துக்கு நிருவாக அதிகாரப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் தொடர்பானது.

செல்லையா சிவம், வவுனிக்குளம், மாங்குளம்.

விண்ணப்பதாரர்.

வழக்கு இல. T/18

எதிராக

விஜயர் மாரிமுத்து, இல. 78, இரண்டாம் யூனிற், வவுனிக்குளம்,

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்க கோட்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்த போனவரின் மரணச் சொத்துக்கு நிருவாக அதிகாரப் பத்திரத்தைப் பெறுவதற்காகத் தொடரப்பட்டு அதில் அத்தியவசியப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக ஆக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டினாலொழிய இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது?

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்
பதிவாளர்

1980 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆந் திகதி.

மேற்சொல்லிய பின்னுறுதிக் கட்டளைக்கெதிராகக் காரணங்காட்டும் காலம் 1980 ஆம் ஆண்டு ஆவணி 7 ஆந்திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி.
ஒப்பம்
பதிவாளர்

தயாரித்தவர்
இ. பொ. மயில்வாகனன்
விண்ணப்பதாரரின்
சட்டத்தரணி

6417

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பட்டப்பகலில்

தனித்திருந்த பெண்ணைத் தாக்கி தாலிக்கொடி அபேஸ்!

[பண்டத்தரிப்பு]

பட்டப்பகலில் வீட்டில் தனிமையாக இருந்த பெண் ஒருவரைத் தாக்கி அவர் அணிந்திருந்த 21 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியைக் கொள்ளையர்கள் அபகரித்த துணிகர சம்பவம் கொக்குவில் பகுதியில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி தாலிக் கொடியை பறிகொடுத்த பிரஸ்தாப பெண்ணான திருமதி மனோன்மணி பரராஜசிங்கம் என்பவர் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. சரத் சந்திரா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி அதேயிடத்தைச் சேர்ந்த நான்கு நபர்களைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்தது. சிவரத்தினம், மாணிக்கராசா, பத்மநாதன், தெய்வேந்திரப் ஆகிய மேற்படி நான்கு சந்தேக நபர்களையும் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு எஸ். யோகநாதன் நான்கு பேரையும் இம்மாதம் 29ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். [அ]

நகையை இரவல் வாங்கி விற்றாராம்

சந்தேகநபர் றிமாண்டில்

[பண்டத்தரிப்பு]

நகையை இரவல் வாங்கி விற்றதாகக் குற்றம்சாட்டிக் கடந்த ஏழு மாதங்களாக ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் தேடப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார். இவரை ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சார்ஜன்ட் திரு. நிலன்துரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. எஸ். யோகநாதன் இம்மாதம் 29 ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். மானிப்பாயைச் சேர்ந்த சின்னப்பு செல்வநாயகம் என்ற பிரஸ்தாப நபர் வேறு ஒருவரிடம் நகையை இரவல் வாங்கி விட்டு அதைத் திருப்பிக் கொடுக்காது ஏமாற்றினாராம். இதுபற்றி ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பிரஸ்தாப நபரைப் பொலிசார் தேடியபோது அவர் தலைமறைவாகி விட்டாராம். ஏழு மாதங்களின் பின்னர் ஆனைக்கோட்டைப் பொலிசார் இந்த நபரைப் பலத்த பிரயத்தனத்தின் பின் கைது செய்தனர். இவரை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது எதிர்வரும் 29ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். [அ]

பொதுநிகழ்ச்சி மண்டபம்

(மன்னார்)

மன்னார் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. பெர்னாண்டோ மன்னாரில் பொது நிகழ்ச்சிக்கு மண்டபம் ஒன்றின் நிர்மாணத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இம்மண்டபம் தற்போது பொ. சபை எதிரேயுள்ள [illegible] அமைந்திருக்கும் காணியில் நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வஜன வாக்குரிமை கிடைத்த 50ம் ஆண்டு ஞாபகார்த்தமாக இம்மண்டபம் மன்னாரில் நிறுவப்படவுள்ளது. [வ]

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றம்

வழ இல. ஈடு/15031

செல்லத்துரை மகள் செல்வராணி மலர்
உடும்பிராய், யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

காலஞ்சென்றவர் 1. கார்த்திகேசு தம்பிமுத்து
2. கார்த்திகேசு தம்பிமுத்து மனைவி பொன்னம்மா, இல. 13/1, பலாலி வீதி யாழ்ப்பாணம் சொந்த முகவரியிலும் எதிராளியின் சட்டப்பிரதிநிதி என்ற முகவரியிலும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றத்தில் MB / 15031- ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை (19-8-1980) காலை 10-30 மணிக்கு இத்தக்காணிக்குள் நின்று ஏலவிற்பனையை நடத்த நியமித்துள்ளேன்.

தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 7600/- வும் மேலும் ரூபா 5000-00 க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்குப் பன்னிரண்டு (12%) வட்டி வீதம் வழக்கு அனைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1979-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் வழக்குச் செலவு ரூபா 774-87½ கொடுக்க வேண்டியுள்ளதாலும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிஷன் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிலுள்ள இலந்தடி பரப்பு நில இலாகா மூன்று குழி [illegible] இரு கீரண்டியின் கீழ் முப்பத்தியிரண்டு ([illegible] நில இலா 3 குழி 6. 21/32) மேற்படி இலந்தடி குளி 1, 2/32 ம் ஒன்று சேர்ந்த ஈ.ப. நில. இலா 3 குழி 7, ¾ வீடும் கிணறும் வாண்மயிர் செய்பயிர்களும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு முருகேசு பொன்னையா உரித்தாளரும் பலாலி ரோட்டும், வடக்கு சின்னப்பொடியர் சின்னதுரை [illegible]. மேற்கு தண்ணீர் வாய்க்கால் தெற்கு ஆறுமுகம் மைம்பெண் அன்னம்மா இத்துப் பிள்ளைகளுக்குமுரியவாதனம் இடைக்கிடையும்.

சி. செ. பாலசிங்கம்
(கோரிக்கையாளரும் பதிப்பாளரும்)

[illegible] வடக்கு,
வட்டுக்கோட்டை.
19-7-80

6425

திரிபுரா கலவரம் 2,000 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 28

திரிபுரா மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற கலவரங்களின் போது 2 000 பேர் பலியாகியுள்ளனர் என்று அம்மாநிலத்திற்கு நேரில் சென்று செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு!

திரிபுரா கலவரம் தொடர்பாக இதுவரை 1900 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது விசாரணை நடத்த விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

திரிபுரா வன்செயல்களினால் இதுவரை 540 பேர் பலியாகியுள்ளனர். [ந]

ராஜ நாராயண ராஜினாமா

பெண்களுக்காக உண்ணாவிரதம் இருப்பாராம்

புதுடில்லி, ஜூலை. 28

"ஜனதா-எஸ்" தலைவர்பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ள திரு. ராஜ் நாராயண் பெண்களின் கண்ணியத்தைக் காப்பாற்றும் வகையில் அடுத்தமாதம் 3-ம் திகதி முதல் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் தெரி

[7ம் பக்கம் பார்க்க]

விற்பனைக்கு கைவசமுள்ளன

இத்தாலியின் மூன்றுசக்கர
வெஸ்பா கார்
இப்பொழுது இலங்கையில் கிடைக்கிறது.
நிகரற்ற சௌகரியத்திற்கும் சிக்கனத்திற்கும்
தோற்றத்திற்கும் உறுதிக்கும்-

இத்தாலியிலுள்ள வெஸ்பாவிலிருந்து சிக்கனமான சௌகரியமான ஒரு போக்கு வரத்து சாதனம் வந்துள்ளது. அது தான் வெஸ்பா மூன்று சக்கர கார்.

சிக்கனமானது ~ கலனுக்கு 80 மைல்கள்.
பாதுகாப்பானது ~ உயர்தர ஹைட்ரோலிக் முறை.
உறுதியானது ~ தயாரிக்கப்படும் 3 சக்கர வாகனங்களில் நிலையானது.
சௌகரியமானது ~ முன்னேற்றமடைந்த சஸ்பென்ஷன் முறை உள்ளதால் 4 நபர் பிரயாணம் செய்யலாம்.

வின்ட்ஷீல்ட் மொடல் சாசிஸ்
ரூபா— 29.750/-

கட்டுப்பணத்திற்கு வாங்க ஒழுங்கு செய்யலாம்.
விற்பனைக்குப் பின் பராமரிப்பும்
உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

வெஸ்பா காரை ஏக ஏஜண்டுகளிடம் பார்வையிடுங்கள்.

கார்மார்ட் லிமிட்டெட்
424, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 96311-5



CEYLINCO ADS

மக்கள் கருத்து

பாராட்டு

திரு. ம. சண்முகம் சாவகச்சேரி சந்திரபுரம் நாவலர் மகாவித்தியாலய ஆசிரியர் கோசலத்தைக் கிருமிநாசினியாக மாற்றும் இயற்கையோடு இணைந்த அவரது ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும் மிக ஆச்சரியமானது பாராட்டத்தக்கது. அவரது வெங்காயத்தாக்கும் கோதிப்புழுவைக் கோசலத்தால் கட்டுப்படுத்தும் முறையைச் சென்ற வருடமும் இவ்வருடமும் இப்பாடசாலைத் தோட்டத்தில் செய்து நிரூபித்துக் காட்டி ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பாராட்டைப் பெற்றுள்ளார். இவரது கண்டுபிடிப்பு மனித சமுதாயத்துக்கும், விவசாயிகளுக்கும் பெரு நன்மையளிப்பதுடன் விவசாயத்துறையில் ஒரு பெரும் புரட்சியையும் உண்டாக்கியிருக்கிறது. இது புழுவைக் கட்டுப்படுத்தும் மிகத் தாக்கமான ஒரு கிருமிநாசினி [illegible] கருதப்பட்டதும், தாராளமாகக் கிடைக்கக்கூடியதும், தீங்கற்றது, செலவற்றது, பயிரை வளர்க்கும் சக்தியைக் கொண்டதுமாகிய கோசலத்தைக் கிருமிநாசினியாக்கி மக்கள் கையில் கொடுத்த இவரது ஆராய்ச்சியைப் பாராட்டுகின்றோம்.

நீ. மனோகரன்,
அதிபர்
மட்டுவில்.

ஃ ஃ ஃ

ஏனிந்தப் பாரபட்சம்

கடந்த 1980-07-13 ந் திகதி அளவெட்டியில் இலங்கை கிராமிய மீளாய்வு நிறுவனமும் அளவெட்டி சனசமூக நிலைய ஒன்றியமும் இணைந்து நடாத்திய பாலர் பாடசாலைகளுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியைக் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

பாலர் பாடசாலைகளுக்கு இடையில் போட்டி நடைபெற்றபோதிலும் அதில் இப்பாரபட்சமான செயல்கள் என்னைப் போன்ற பல பார்வையாளர்களைக் கவலைக்குள்ளாக்கிவிட்டன.

இப்போட்டியில் மஞ்சள், நீலம், பச்சை இல்லங்கள் கலந்துகொண்டன. போட்டிகள் சிறப்புற அமைந்தபோதிலும் புள்ளிகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டது தான் காரணம்.

குறிப்பாக பச்சை இல்லத்தின் சார்பில் கலந்துகொண்டிருந்தவர் ஒவ்வொரு விளையாட்டிலும் ஏதாவது ஒரு இடத்தை (அதாவது முதலாவதாகவோ அல்லது இரண்டாவதாகவோ அல்லது மூன்றாவதாகவோ) பெற்றிருந்ததை அங்கு நின்ற அனைவரும் அறிவார்கள். ஆனால் அறிவிப்பாளரோ ஒரு தடவை சொன்ன பச்சை இல்லம் பெற்ற மொத்தப் புள்ளியையே பல தடவை கூறினார். மற்றைய இல்லங்களின் புள்ளிகள் ஒவ்வொரு தடவை அறிவிக்கும்போதும் அதிகமாக இருந்ததைப் பலரால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது பற்றி அங்கு நின்றவர்களிடம் விசாரித்தபோது அந்தப் பச்சை இல்லத்திலுள்ளவர்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களென்று கூறினார்கள். பாலர்களின் விளையாட்டில்கூட இப்படியொரு கேவலமான செயலை எண்ணி வேதனையடைந்தோம்.

இப்படியான செயல் வளர்ந்துவரும் சமூகத்தில் அவர்களையொரு சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாக்க முடியாத நிலைமை ஏற்படுத்திவிடும். ஆகவே இனிமேல் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் இப்படியான பாரபட்சம் காட்டாதபடி போட்டிகளை நடாத்துமாறு இப்போட்டியை நடாத்திய சங்கங்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

கி. பிரிய[illegible]
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

---

3 ஆண்டுகளில் நியமனம் பெற்ற

20 ஆயிரம் ஆசிரியர்களில் 1300 பேர் மட்டுமே தமிழர்

பருத்தித்துறை எம். பி. தகவல்

([illegible] பள்ளி)

"இந்த அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் நியமனம்பெற்ற 20 ஆயிரம் ஆசிரியர்களில் 1,300 பேர் மட்டுமே தமிழர்களாய் இருக்கும்போது தமிழாசிரியர் பற்றாக்குறை எப்படித் தீரும்? இந்த 1,300 பேரில் எம். பி. க்களின் சிபார்சிலும், அமைப்பாளர்களின் சிபார்சிலும் நியமனம் பெற்றவர்களும் அடங்குவர்."

உடுத்துறை மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, வித்தியாலய அதிபர் திரு. வே. வி. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார். அவர் இவ் வைபவத்தில் மேலும் பேசும்போது கூறியதாவது:

"கிராமப்புறங்களில் வாழும் மக்களிடம் கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் காணப்படுகிறது. அவ்வார்வத்தினை வெளிக்கொணர்வதற்குப் பாடசாலைகளிலே ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக நிலவிவருகிறது. இந் நாட்டில் மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் இதனைத் தீர்த்துவைப்பதற்கு விரும்பவில்லை. பருத்தித்துறை தொகுதியில் குறிப்பாகப் பருத்தித்துறை கிழக்கிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையினால் கடந்தகாலக் கல்வி பாதிப்படைந்துவந்ததை நான் உணர்வேன். இதனால் கடந்த காலப் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களில் பலரை இப்பகுதியில் சேவையாற்ற நான் நடவடிக்கை எடுத்தேன். ஆசிரியர் நியமனத்தில் கடந்த காலங்களில் பல ஊழல்கள் நடைபெற்றன. இதனை நாம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கவனத்தின் கீழ் கொண்டுவந்தோம். இதன்பயனாக ஆசிரிய நியமனங்களையும் மற்றும் விஷயங்களையும் கவனிப்பதற்காகத் தனியான ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திக்காக வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான பணம் கடனாகப் பெறப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு தொகுதியின் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்ட நிதி வெட்டப்படுகிறது"

முதலுதவிப் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

[illegible] வெளி நிலையத்திலுள்ள 24 மாணவிகளுக்கு முதலுதவிப் பயிற்சி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரால் அளிக்கப்பட்டுள்ளது.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்த சகோதரி போல் இந்தப் பயிற்சியை நடாத்தினார். பயிற்சி பெற்றவர்களுக்கான முதலுதவிச் சான்றிதழ்கள் மானிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி. ஏ. சிவானந்தனின் தலைமையில் வழங்கப்பட்டன. [ச]

பெற்றோர் பெரியபாடசாலைகளை நாடுவதால்

யாழ். சிறிய பாடசாலைகளை வளர்க்க முடியவில்லையே

பிரதமகல்வி அதிகாரி சிவபாதம் கவலை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்திலுள்ள 13 கல்வி வட்டாரங்களில் 171 சிறிய பாடசாலைகள் இருக்கின்றன. இப்பாடசாலைகளில் 100க்குக் குறைவான பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளை பெரிய பாடசாலைகளில் படித்தால்தான் கல்வியில் முன்னேற்றம் காணமுடியுமென எண்ணிப் பெரிய பாடசாலைகளை நாடுவதால் சிறிய பாடசாலைகளை வளர்ச்சியடையச் செய்ய முடியாமல் இருக்கிறது"

இவ்வாறு யாழ் மாவட்டப் பிரதம கல்வியதிகாரி திரு. எம். பி. சிவபாதம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'யுனிசெவ் நிறுவனத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுநல இயக்கங்களின் பங்கு' என்ற தலைப்பிலான ஆய்வரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆய்வரங்கிற்கு யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் பொதுநல இயக்கங்களின் பிரதிநிதிகள் இந்த ஆய்வரங்கில் கலந்துகொண்டனர்.

திரு. பி. சிவபாதம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"யாழ். மாவட்டத்தில் மட்டும் கல்லூரிகளில் ஆசிரியர் பற்றாக்குறையில்லை. இந்த நாட்டில் பிறந்த, கல்வி கற்ற பெருந்தொகையான கல்விமான்கள் அதிக சம்பளத்தை எதிர்பார்த்து வெளிநாடு செல்கின்றனர். இதனால் இலங்கை எங்கும் ஆசிரியர் பற்றாக்குறையுண்டு

பொம்மைவெளியில்

"யாழ். பொம்மைவெளியில் ஓர் ஆரம்ப பாடசாலையை திறவும் சாத்தியம் பற்றி யாழ். கல்வித் திணைக்களம் ஆலோசித்து வருகின்றது. கல்வி அமைச்சு இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாயின் அப் பகுதியில் பாடசாலை அமைக்கப்படும்.

"யுனிசெவ் நிறுவனம் இம் மாவட்டத்திலுள்ள 58 பாடசாலைகளுக்கு வானொலிப் பெட்டிகளை வழங்கியுள்ளது. இதனைவிட ஆசிரியர்களுக்குச் சைக்கிள்கள், அவர்களுக்கான வதிவிடங்கள், நூல்நிலையங்கள் இல்லாத பாடசாலைகளில் நூலக வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது"

இலங்கைச் சிறுவர் ஆண்டுச் செயலக நிர்வாக உதவியாளர் திருமதி மல்காந்தி பெரேரா உரையாற்றுகையில் "யுனிசெவ் நிறுவனத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயற்படுத்த, பொதுநல இயக்கங்கள் எவ்வாறு உதவலாமென்பதை ஆராய்வதற்காக இன்று கூடியிருக்கிறோம். உங்கள் ஆலோசனைகள் பயனளிக்குமாயின், உங்கள் பகுதி மக்களே நன்மையடைவர்" என்றார்.

இம்மூன்றுநாள் ஆய்வரங்கில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ். மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. என். [illegible] உட்படப் பலர் ஆரம்ப உரையாற்றினர்.

முதல்நாள் நிகழ்ச்சியின் போது மாவட்டத்தில் சிறுவர்களின் தேவைகளும், பிரச்சினைகளும் குறித்து உரையாடல் இடம்பெற்றது. (செ-நி)

எச்சாட்டி அம்பாள் உற்சவம்

(பண்டத்தரிப்பு)

[illegible] எச்சாட்டி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று ஆகஸ்ட்மாதம் 12ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். உற்சவ நாட்களில் தினமும் நல்லை ஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் கந்தபுராண இன்னிசை விரிவுரை தினமும் மாலை 7-30 மணி தொடக்கம் நிகழ்த்தப்படும். (ஏ)

வீட்டுக்குத் தீவைத்ததாக இரு வாலிபர்கள் கைது

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு நேரத்தில் கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றுக்குத் தீவைத்துச் சேதப்படுத்தியதாகச் சந்தேகத்தின் பேரில் ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. எஸ். யோகநாதன் அவர்கள் இம்மாதம் 29ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த பசுபதி ஜெயசீலன் என்பவரின் வீட்டிற்கு நெருப்பு வைத்ததாகவும் வீட்டின் குசினியை எரித்துச் சேதப்படுத்தியதாகவும் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லைதுரை கொக்குவிலைச் சேர்ந்த கோணேஸ்வரன், இந்திரகுமார் ஆகிய இரண்டு வாலிபர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார். இவர்களை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 29ம் திகதி வரை றிமாண்டில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (ஏ)

மிதிபலகையில் சென்ற பிரயாணி பலியானார்

[யாழ்ப்பாணம்]

இ. போ. ச. பஸ் வண்டியில் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்தவர் தவறிவிழுந்து மரணமானார். இவ்விபத்து சங்கானையில் நடைபெற்றது.

யாழ் மாநகர சபையில் கடமையாற்றிய நடராசா என்பவர் யாழ். நகரிலிருந்து மாதகல் வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ் வண்டியில் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்ததாகவும், சங்கானையில் பஸ் வளைவு ஒன்றில் திரும்பும் போது தவறிவிழுந்துவிட்டதாகவும் பலத்த காயங்களுக்குள்ளான இவரை யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்தபோது அங்கு இறந்துவிட்டதாகவும் திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் போது சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை பொலிஸ் சார்ஜன்ட் திரு. துரைரத்தினம் சாட்சிகளை ஆஜர் செய்தார். விசா[illegible] விபத்தினால் மரணம் என்று தீர்ப்பு வழங்கினார் (பண்-நி)

---

20 வருடமாக 'சுவீப்' வாங்கியவர் தற்கொலை

[சுழிபுரம்]

இருபது வருடங்களுக்கு மேலாக வாராவாரம் சுவீப் டிக்கட் வாங்கிவந்த பொன்னாலையைச் சேர்ந்த இத்தினியன் கிருஷ்ணன் என்பவர் வாழ்வில் ஏற்பட்ட விரக்தியால் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இவர் வாங்கிய சுவீப் டிக்கட்டுக்கு ஆறுதல் பரிசுதானும் கிடைக்கவில்லை. வாங்கிய டிக்கட் யாவும்ஒன்று சேர்த்து ஒரு பெரும் சாக்குப் பையில் வைக்கப்பட்டிருந்தது.

இத்தினியன் கிருஷ்ணன் தனது மகன் சிங்காரம் என்பவரிடம் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார். நான் இறக்கும்போது இந்த சுவீப் டிக்கட் யாவற்றையும் என்மேல் போட்டுக்கொளுத்தவேண்டும் மகன் தந்தையின் சொற்படி தந்தையின் இறுதிக் கிரியைகள் செய்தபோது சபையோர் முன்னிலையில் இ. கிருஷ்ணனின் உடலம் யாவும் மூடத் தக்கவகையில் டிக்கட் யாவற்றையும் பரப்பி வைத்தார். பின்னர் சுவீப் டிக்கட் யாவற்றையும் சுடலைக்கு எடுத்துச் சென்று எரிக்கப்பட்டது. இவர் வாங்கிய டிக்கட் யாவற்றையும் சேர்த்துப்பார்த்தால் ரூபா ஐயாயிரத்துக்கு மேல் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆலய உற்சவம்

([illegible])

[illegible] செம்மந்தீவு முத்துமாரியம்மன் ஆலய உற்சவம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது. (ச)

மணிவாக்கு

இதயமாகிய கோயிலை சுத்தமாக வைத்துக் கொள். அப்பொழுது தான் ஆண்டவன் அங்கு எழுந்தருளுவான்.
—சுவாமி விவேகானந்தர்.

நமது நோக்கு

சமூக விரோதி

ஒரு தனியார் வியாபார ஸ்தாபனத்தில் வேலைசெய்த இளம் பெண் லிகிதர் ஒருவர் வேலை நேரத்தில் உணவருந்தியதால் வேலைநீக்கம் செய்யப்பட்டார். இதன் எதிரொலி தற்கொலை. இவ்வித சம்பவங்கள் அனந்தம்!

மாணவர்கள் தொடக்கம் வயோதிபர் வரைக்கும் நஞ்சைத் தஞ்சம் என்று தம் உயிரை மாய்ப்பவர்களின் தொகை வரவர அதிகரிக்கிறது. இதுதான் பொலிஸாரின் இன்றைய புள்ளிவிபரங்கள் தரும் தகவல்.

கொலையிலும் பார்க்கத் தற்கொலை அதிகரிப்பது நாட்டின் சமுதாய நலன் குன்றிவருவதின் அறிகுறி என்பதில் சந்தேகமில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமயக்கருத்தரங்கொன்றில் பங்குபற்றிய சமூக ஆராய்ச்சியாளர் ஒருவர், தற்கொலைச்செயலும் சமூகநோய் நாட்டின் முதலாவது சமூக விரோதி எனக் குறிப்பிட்டார்.

புள்ளிவிபரங்களை ஆதாரமாய்க்கொண்டு நிகழ்த்திய ஆய்வுரையில், விகிதாசாரத்தின்படி தமிழர்கள் தற்கொலையின் தொகை மிகக் கூடியதென்ற முடிவுக்கு வந்தார்.

தமிழர்களுக்குள்ளும் இந்துசமயத்தவர்களின் தொகையிலும் கூடியதென்று வருத்தம் தெரிவித்தார். கேட்போர் அனைவரும் இந்து மதத்தவர்கள், திகைத்தனர். நம்பத் தயங்கினர். "புள்ளிகள் சொல்லுவதெல்லாம் பச்சைப்பொய்" என்ற வாக்கியத்தையும் நினைவுகூர்ந்தனர். பலத்த விவாதத்தின்பின் உண்மை உண்மையே என்ற முடிவுக்கு வந்தனர்.

வாலிபனோ, வயோதிபனோ, எந்த ஒரு கோழையவன சொல்லுக்குப்பயப்[illegible] ஆண்[illegible]டன் [illegible]; அவ் [illegible]. இந்த [illegible]சம் காலத்தில் மனவிர[illegible]தி என்ற சமூக நோயாக மாறுகின்றது. தற்கொலையே அதன் விளைவு.

காரணம் எதுவாயுமிருக்கலாம், பரீட்சை முடிவு, காதலில் தோல்வி, கல்யாணத்தில் தடை, வேலையின்மை, வேலைநீக்கம், குடும்பப் பொறுப்பு, பெற்றோர் கண்டிப்பு, தாங்கமுடியாத நோய், இரக்கமற்ற சூழ்நிலை,

மாறிவரும் இன்றைய உலகில் வெற்றியும் பல சந்தர்ப்ப இடைவெளியைக் குறிக்கின்றன. மாணவர் சார்பில் சாப் பெயரளிக்கும் [illegible] செயலுக்கு மறைமுகமான காரணி என்பதை அறியமாட்டார்கள். நாம் முதலில் குறிப்பிட்ட இளம் பெண்ணின் உயிர் அநியாயமான சட்டத்துக்குப் பலியானதென்பதை யார் மறுப்பார்?

நவீன மனிதன் அல்லும் பகலும், பலவித சோதனைகளால் தாக்கப்படுகிறான். உணவு, உடை, உறைவிடம் உட்பட பலவித செளகரியங்களைத் தேட இன்றைய சமூகசூழ்வு அவனைத் தூண்டுகின்றது. கைக்கடையும் அவனுக்கு அவனுடைய மதஸ்தாபனம் மனமாற்றம் ஏற்படுத்த முயல்கின்றது. பௌத்தம், கிறீஸ்தவம் போன்ற மதங்களில் ஏவ்வித ஆன்மீக சேவை எத்தனை உயிர்களுக்கு விமோசனம் அளிக்கின்றது.

இந்துமதத்தவர்களுக்கென்ன உண்டு? சமூக ஆராய்ச்சி என்ன முடிவைக் [illegible] இந்த நிலை [illegible] வேண்டியது.

அஸாம் மாநில கொந்தளிப்புநிலை ஏனைய மாநிலங்களுக்கும் பரவுமா?

ஒரு கண்ணோட்டம்

அ. சுபாஸ்கரன் பி. ஏ. (சிறப்பு)

இந்திய உள்விவகார அரசியலில் அஸாம் மாநிலத்தில் நிலைகொண்டுள்ள கொந்தளிப்பு மத்திய அரசுக்குப் பெரும் தலையிடி கொடுக்கும் பிரச்சனையாக விளங்குகின்றது. இம் மாநிலத்தில் குடியேறியுள்ள வெளியாரை வெளியேற்றுமாறு மத்திய அரசுக்கெதிராக கடந்த பத்துமாத காலமாக அஸாமியர்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். இப் போராட்டமே இம்மாநிலத்தில் நிலைகொண்ட கொந்தளிப்பு நிலைக்கு அடிநாதமாகும். அஸாமியரிடையே நிலை கொண்ட இப்போராட்ட மனநிலை பொதுவாக முழுஇந்திய மாநிலப்பிரிவுகளினுள்ளும் வாழ்கின்ற பெரும்பாலான மக்களிடையே இலகுவாக அவதானிக்கமுடியும். அஸாமைப்போலவே ஏனைய வடகீழ் இந்திய பிராந்தியத்தில் அமைந்துள்ள நாகாலாந்து மணிப்பூர், திரிபுரா என்னும் மாநிலப்பிரிவுகளினுள்ளும் அருணாசலப்பிரதேசத்திலும் இதனை அவதானிக்கலாம். எனவே தான் இன்றைய அஸாமிய கொந்தளிப்புநிலை ஏனைய இந்திய பிரிவுகளினுள்ளும் தலைதூக்கலாம் என நம்ப இடமுண்டு. இதற்கிடையில் சில மாதங்கட்கு முன் திரிபுராவில் அஸாமின் கொந்தளிப்பின் பிரதிபலிப்புச் செயல்பட்டு நூற்றுக்கணக்கானோரின் உயிர்ச்சேதத்தை விளைவித்தமை பலரும் நினைவிருக்கலாம்.

வெளியார் குடியேற்றம்

அஸாமினுள் வெளியார்குடியேற்றம் அஸாமியரைத் தம் மாநிலத்திலேயே சிறுபான்மையராக்கிவிடும் என்னும் அச்சம் நீண்டகாலத்துக்கு முன் நிலைகொண்ட ஒன்றாகும். 1931ல் குடிசன மதிப்பு அறிக்கையில் வங்காளத்திலிருந்து அஸாமுக்கு குடியேறி வருபவர் தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்றது என்றும் இன்னும் 50 வருடங்களின் பின் அஸாமியர் தங்கள் பிரதேசத்தின் பலபிரிவுகளுள் சிறுபான்மையராகிவிடுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. 1944ல் இப்பிரச்சனை குறித்து அஸாமியர்கள் மகாத்மா காந்தியிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இவ்வமயம் மகாத்மா வெளிமாநில மக்கள் அஸாம் போன்ற சிறிய மாநிலத்தினுள் பெரும்தொகையாகக் குடியேறுவதை தொடர்ந்து இடம்பெறின் அம்மாநிலத்தவர் சிறுபான்மையராக்கப்படும் அவலநிலை இடம்பெறுகின்றது என்றும், இதற்கெதிராக அம் மாநிலத்தவர் சத்தியாக்கிரகம் செய்வதற்கு உரிமையுண்டு என்றும், இப்பிரச்சனைக்கு எவரும் வகுப்புவாதச் சாயம் பூச வேண்டாம் என்றும் அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கையின் விபரம் [illegible] என்றபத்திரிகையில் வெளிவந்த அஸாமியப் பிரச்சனை என்ற கட்டுரையில் காட்டப்பட்டிருந்தது.

அஸாமியர் சிறுபான்மையினர்

குடித்தொகைக் கணக்கின் படி 1961ல் அஸாமின் குடித்தொகை 12 மில்லியனாக இருந்தது. 1971ல் இவ்வளவு 15 மில்லியனாக உயர்ந்தது. அண்மையில் நடந்த உத்தேச மதிப்பின் படி இது 18.5 மில்லியனாக உயர்ந்துள்ளது. இதில் 8.5 மில்லியன் தொகையினர் இம்மாநிலத்திற்கு அந்நியர்களாம். இதில் 4.5 மில்லியன் தொகையினர் 1951ஆண்டின் பின் இம்மாநிலத்தினுள் குடியேறியவர்களாம். 1951ம் ஆண்டே அஸாமிற்கு தேசிய இடாப்பு ஏற்பட்ட ஆண்டாகும். எனவே இவ் 4.5 மில்லியன் தொகையினரே அந்நியர் என உறுதிசெய்ய முடியும். பிறப்பு இறப்புச் செய்முறை எனும் இயற்கைஅதிகரிப்பினுள் குடித்தொகை உயர்ந்துவரும் இந்தியாவில் இடப்பெயர்வு எனும் செயற்கை அதிகரிப்பினால் குடித்தொகை [illegible] முதல் மாநிலமாக அஸாம் [illegible]ந்துவந்துள்ளது. இவ்வுண்மை [illegible] குடித்தொகை விபர அறிக்கைகளைத் தொடர்ந்து அவதானிப்பவர் சாதாரணமாகத் தெரிந்துகொள்வர்.

காலனித்துவ ஆட்சி இந்தியாவில் நிலைகொள்வதற்கு முன் இன்று இருக்கும் அஸாமும் ஏனைய வடகீழ் இந்தியப் பிராந்தியமும் அஸாமிய இந்து அரசினால் நிர்வகிக்கப்பட்டிருந்துள்ளது. இதிலிருந்து அஸாமியர்கள் தமக்கென தனித்துவமான மொழி, கலை, கலாச்சாரப் பண்பாட்டினைக் கொண்டு இருந்தனர் என்று நம்பலாம். இம்மாநிலத்தின் பெரும்பகுதி மலைச்சாரல்களைக் கொண்டு இன்றது. மேலும் அதிக அளவு மழை பெறும் பிரதேசமாக இது விளங்குகின்றது. கங்கை நதியுடன் சங்கமமாகும் பிரமபுத்திரா நதியோ இம்மாநிலத்தை ஊடறுத்துப் பாய்கின்றது. இயற்கை வனப்பின் வாய்ப்பான தன்மைக்கிணங்க காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயர் மேற்கொண்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை நடவடிக்கையால் அஸாமியப் பிரமபுத்திராப் பள்ளத்தாக்கு தேயிலைத் தோட்டங்களாகப் புனரமைக்கப்பட்டது. ஆங்கிலேயரின் இப்புதிய பொருளாதார நடவடிக்கையே அஸாமில் வெளியார் குடியேறுவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அமைந்தது. இன்றைய [illegible] தினுள் இருந்த 1911—31க்கிடையில் இந்தத் தேயிலைத் தோட்டங்கட்கு மலிவான கூலி உழைப்பாளிகள் பெருமளவு [illegible] வரவழைக்கப்பட்டனர். மேலும் இந்தோட்டங்கள் [illegible] வங்காள மாநிலத்திலும் இருந்து படித்த இந்துக்கள் பெருமளவில் குடியேறினர். இப்பெருந்தோட்ட நடவடிக்கையைவிட அஸாமில் காணப்பட்ட [illegible] காரணமாகவும் குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன; என்பது குறிப்பிடத்தக்கது.

(நாளை தொடரும்)

எம். பி.யின் ஜீப்பை வழிமறித்து தாக்கியவர்களுக்கு பரு. நீதவான் தண்டனை

(புலோலி)

பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. துரைரத்தினத்தின் ஜீப் வண்டியையும், மகனையும், உறவினரையும் தாக்கிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுக்கும் பருத்தித்துறை நீதவான் திரு கே. எஸ். பரேசன் தண்டனை வழங்கியுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தாக்கல்செய்யப்பட்டிருந்த இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எம். தங்கவடிவேல் இ. சந்திரகுமார், க. நந்தகுமார் ஆகிய மூவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவர்களுள் 1-ம் எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதித்த நீதவான், 2-ம், 3-ம் எதிரிகளுக்கு தலா 200 ரூபா அபராதம் அல்லது இரண்டு மாதச் சிறைத்தண்டனையும் வழங்க உத்தரவிட்டார்.

எதிரிகள் மதுபோதையில் இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதலால் நீதவான் எதிரிகளை கண்மண் தெரியாமல் குடிக்கக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் உதவியாளரின் மரணச் செய்தியை வேறொரு உறவினருக்கு அறிவிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினரின் மகனும், இன்னொருவரும் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது வல்வெட்டித்துறையில் மதுபோதையில் நின்ற எம். தங்கவடிவேல், இ. சந்திரகுமார், க. நந்தகுமார், வி. துரைமணி ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினரின் ஜீப்பை வழிமறித்து அதற்குச்சேதமேற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தினர்கள் என வல்வெட்டித்துறைப் பொலிசார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். பரேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

4ம் எதிரியான துரைமணி இச்சம்பவத்தில் ஈடுபடவில்லை, எனப்பொலிசார் கருதுவதாக வல்வெட்டித்துறை பொலிஸ் சார்பில் ஆஜராகியிருந்த [illegible] தெரிவித்ததையடுத்து 4ம் எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மற்ற மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

1ம் எதிரி தான் ஒரு கார்ச் சாரதி எனவும் சம்பவ தினம் தான் பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறைக்கு [illegible] கொண்டிருந்தபோது எதிரிகள் கடும் மதுபோதையில் நின்றார்கள் எனவும் தான் காரை மறித்து அவர்களுடன் கதைத்துக்கொண்டு நிற்க 2ம் எதிரி அதோ எம். பி.யின் ஜீப் என்று கூறியபோது 3ம் எதிரி ஜீப்பை மறித்த வேளை [illegible] சேதப்படுத்தி [illegible] தான் இச்சம்பவத்தில் ஈடுபடவில்லையென்றும் தெரிவித்தார்.

நீதிமன்றத்திற்கு கட்சி ஆதரவாளர்களைப்பற்றி எதுவித அக்கறையும் இல்லை எனவும் எந்தக்கட்சி ஆதரவாளராகவும் இருந்து குற்றம் செய்தால் அக்குற்றத்திற்கேற்ப தண்டனை வழங்க நீதிமன்றம் தயங்காது என்றும் இனிமேல் எதிரிகள் இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடாதென்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் தலைவர்களாவர்கள்; அவர்கள் [illegible] ஒரு அங்கம், அவர்கள் தமது கடமைகளைச் செய்வதைத் தடைசெய்வது பிழையானதும் சாதாரணமான குற்றமாகும் எனவும் இந்த பாராளுமன்ற உறுப்பினரின் ஜீப் வண்டியை அவரது மகன்தான் ஓட்டிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டு [illegible] நீதவான் [illegible] கடுமையான தண்டனை ஆகவேண்டி நேரிட்டிருக்கும் [illegible] நீதவான் 1ம் எதிரி உண்மையைக் கூறியபடியால் அவருக்கு 100ரூபா அபராதமும் 2ம், 3ம் எதிரிகளுக்கு தலா 200 ரூபா அபராதமும் விதித்தார். அத்துடன் அபராதப்பணத்தை கட்டத் தவறினால் 1ம் எதிரி 1மாதம் சிறைத்தண்டனையும் 2ம் 3ம் எதிரிகள் கட்டத்தவறினால் 2மாதச் சிறைத்தண்ட

(8ம் பக்கம் பார்க்க)

மயக்கமுற்ற மாணவிக்கு உதவிய ஜீப்

(பச்சிலைப்பள்ளி)

விளையாட்டுப் போட்டியில் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்ட மாணவி திடீரென மயக்கமுற்று விழுந்து நெடு நேரம் மயக்கம் தெளியாத நிலையில் பருத்தித்துறை எம். பி திரு க. துரைரத்தினத்தின் ஜீப்பின் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுக் குணம் பெற்றார்.

உடுத்துறை மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட மாணவியே இவ்வாறு மயக்கமடைந்தவராவார். மாணவி மயக்கமடைந்து நெடு நேரமாக மயக்கம் தெளியாத நிலையில் அங்கு வந்து சேர்ந்த பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு க. துரைரத்தினம் தமது ஜீப்பின் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சையளிக்க உதவினார். (அ)

இன்றைய றமழான் சிந்தனை

சரீர இச்சையைப் பின் தொடராதே. அது உம்மை அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழிதவறச் செய்து விடும்.

தொகுப்பு:
மௌலவி பௌசியா கரீம்

ஸகர் முடிவு - 4-28
நோன்பு திறக்கும் நேரம்: 6-31

மலக்குகள் நற்சாட்சி சொல்வார். மறுமை நாளில் [illegible] பற்றி கணக்குக் கொடுக்க [illegible] [illegible]க்கப்படுவர்.

பாராளுமன்றத்தில் :

கடந்தவாரம்

அபிவிருத்தி என்ற பெயரால் இழைக்கப்படும் பாவங்கள்தான் எத்தனை?

தமது அவசரகாலச்சட்ட வாதத்திற்கு நல்லூர் 'சிவா' முத்தாய்ப்பாகவைத்தகூற்று

நமது நிருபர்
சு. மகாலிங்கசிவம்

"ஓ, அபிவிருத்தியே! உன் பெயரால் இழைக்கப்படும் பாவங்கள் எத்தனை?"

நல்லூர் எம். பி. திரு எம். சிவசிதம்பரம் கூறிய வாசகம் தான் இது.

அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அதன் பொருளாதாரக் கொள்கைகளும் நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்தி, வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும், அதன் விளைவாகத் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்கும், இன்றைய நிலைமைகளுக்கும் காரணமாயின என்ற தோரணையில் அவசரகாலச் சட்டப் பிரகடனம் மீதான விவாதத்தில் வாதிட்ட திரு. சிவசிதம்பரம், தம்முடைய வாதத்திற்கு முத்தாய்ப்பாகத் தெரிவித்த கூற்று இது.

இம்மாதம் 16ந் தேதி ஜனாதிபதியால் பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனஞ் செய்யப்பட்ட அவசரகாலநிலைத் தீர்மானம் மீதான விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் ஐந்து மணி நேரம் நடைபெற்றது.

வேலைநிறுத்தம் பற்றிச் சபையில் முன்னரே ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் மீது சுமார் மூன்று மணி நேரம் உரையாற்றியிருந்த பிரதமர், அன்று அவசரகாலநிலைப் பிரகடனத் தீர்மானத்தைச் சபையில் சமர்ப்பித்த பின்னர் உரை எதையும் நிகழ்த்தவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தீர்மானம் மீதான விவாதத்தை ஆரம்பித்தார்.

மக்களின் கஷ்டங்களுக்கு நிவாரணமளிக்கும் மாற்று நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது ஒவ்வொரு அரசினதும் கடமையென்ற அவர், இவ்விதத்தில் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சொற்பமானதும் ஏனோதானோ நிலையாகவுமே இருக்கின்றன என்றும், இந்தக் கொள்கையைத் தான் இது தொடர்ந்தும் பின்பற்றி வருகிறதென்றும் சொன்னார்.

வாழ்க்கைச் செலவு உயர்வையும், அதன் விளைவு-பாதிப்புகளையும் தெளிவாக விளக்கிய எதிர்க்கட்சித் தலைவர், இந்த அடிப்படையிலேயே உருவான இந்த வேலைநிறுத்தத்துக்கு எதிராக அரசு பலமான தடியை பாவிக்கிறது. இந்நேரத்திலாவது அரசு ஒரு சம்பள உயர்வை அறிவித்து, தொழிலாளர்களை திரும்ப அழைத்து சமரசமாக இப்பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும் என்று அரசுக்கு சமாதான வேண்டுகோள் விடுத்த அவர், வேலைநிறுத்தம் செய்தோர் வேலைக்கு வரவேண்டியதில்லை என்ற கொள்கையை அரசு தளர்த்தாவிட்டால் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து எச்சரிக்கையும் விடுத்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பத்திரிகைத் தணிக்கையையும் பலமாகக் கண்டித்த எதிர்க்கட்சித் தலைவர், தொழிற்சங்கங்களுக்கு எதிராக அரசு ஒரு யுத்த பிரகடனத்தை செய்கிறது! துணிச்சல் கொண்டவன் பயங்கரமானவனாகி விடுவான் என்பதையும் அரசு கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

தனக்கோ, தன்னுடைய கட்சிக்கோ ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் இருப்பதாக எவருமே கருதமாட்டார்கள் என்று திரு. அமிர்தலிங்கம் கூறியிருந்தபோது பதில் பொதுநிர்வாக அமைச்சர் திரு ஹரீந்திர [கொரியா], சம்சோனி கமிஷன் அறிக்கை வெளிவந்ததும், தங்கள் பிரிவினைக் கோரிக்கை சரிவராது என்பதை உணர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இப்போது சுதந்திரக் கட்சியின் பின்னால் [illegible] பாதையில் செல்லப் பார்க்கிறார்கள் என்றார்.

"எங்கள் நிலைமை எவ்விடத்திலும் நிலைநாட்ட எம்மால் முடியும்: கமிஷன் அறிக்கையை சந்திக்க நாம் தயார்" என்றபடி எழுந்த கூட்டணித் தலைவர் திரு சிவசிதம்பரம், முன்னைய அரசாங்கத்தின் காலத்திலும் இதேவிதமான நடவடிக்கைகளுக்கு எதிராக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் சேர்ந்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவந்ததை ஒழுங்குப் பத்திரத்திலிருந்து சுட்டிக்காட்டினார்.

இவ்விவாதத்தின்போது இந்த அரசாங்கால 'ஹன்சாட்' மேற்கோள்கள் வெகுவாகக் காட்டப்பட்டன. அரசாங்கக் கட்சியினரும் சுதந்திரக் கட்சியினரும் இவற்றை மேற்கோள் காட்டினார்கள்.

இதில் சுவாரஸ்யம் என்னவெனில், கலாநிதி என். எம். பெரேரா, பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, [illegible] ஆகியோரின் நடவடிக்கைகளை அரசாங்கத்தினர் தமக்கு ஆதாரம் காட்டியதும்

(3ம் பக்கம் பார்க்க)

ரியூட்டரிமாணவி கொலை விசாரணைமீண்டும் 31-ம்திகதி

21 பேர் இதுவரை சாட்சியம் அளித்துள்ளனர்

(புலோலி)

பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரனின் கொலைவழக்கு விசாரணை இம்மாதம் 31ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30 திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆரம்பமான இக்கொலை வழக்கு விசாரணை கடந்த 25ம் திகதிவரை 10 நாட்கள் நடைபெற்றுள்ளது.

கொலைசெய்யப்பட்ட மாணவியின் தாயார் திருமதி. இராசலட்சுமி இராமச்சந்திரன், அயலவரான ஆர். அழகேசன், திருமதி இராசலட்சுமியுடன் கூடக் கற்பித்த ஆசிரியையின் கணவரான இ. பதுமநாதன், கொலையுண்ட சமயத்துடன் ஒழுங்கைச் செல்லும் ஜெகட்லர் ஜெகநாதன், [illegible] உதயமாலினி, வேலுசுந்தரம் இளஞானவதி, வல்வெட்டித்துறை நடராசா லோகநாதன், பருத்தித்துறை சுகாதார பரமசிவம், புத்துவெட்டுவான் பயிற்சியாளர் மனோகரன், சந்தாதோட்டம் செல்லத்துரை ஸ்ரீ கந்தராசா, ராணியின் தகப்பனுரை [illegible] பொன்னம்பலம் செல்லையா, பருத்தித்துறை சனுள் உரிமையாளர் கந்தசாமி தேவமோகன், ராணியின் [illegible] தாரணா செல்வியா மகேந்திரன், கொலையுண்ட மாணவி கமலம் அணிந்திருந்த நகைகளை செய்து கொடுத்த நகைத் தொழிலாளி, கிளிநொச்சியில் பவுண் வியாபாரம் செய்த [illegible] [illegible]யைச்சேர்ந்த இராசா கனகசபாபதி (நகைத் தொழிலாளி), புத்துவெட்டுவான் மனோகரனின் தாயார் மயில்வாகனம் மேரி மகடலின் தேசம்மா, இராமநாதபுரம் திருமதி. பாருபதிப்பிள்ளை, அதே இடத்தைச்சேர்ந்த தவராசா பரமேஸ்வரி ஆகியோரும் மற்றும் நீதிமன்ற உத்தரவின்படி புலோலி புற்றளையைச் சேர்ந்த [illegible] கனகரத்தினம், வராத்துப்பளையைச் சேர்ந்த நல்லதம்பி இராசசுந்தரன், [illegible] ஆகியோரும் இதுவரை சாட்சியமளித்துள்ளனர்.

71 சாட்சிகள் உள்ள இக்கொலை வழக்கில் இதுவரை 21 சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனரென்பதும் குறிப்பிடத்தக்கது. (க)



புதுமையான போனஸ் திட்டம்
உள்ள ஒரு சேமிப்பு

[illegible]
சேமிப்பு கணக்கு வழங்குவது வருடத்திற்கு 10% வட்டி
[illegible] ஒருவருடம் பணத்தை மீளாதிருந்தால்
வருடத்திற்கு மேலதிகமாக 8% வட்டி ஆகவே
வருடத்திற்கு 18% வட்டி வழங்கப்படும்.
உங்களால் இயன்ற பொழுது சேமியுங்கள்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
முழுவிபரமும் அறிந்து கொள்ளலாம்.
[illegible] – 26174 கொட்டாஞ்சேனை – 33471
[illegible]

வரையறுக்கப்பட்ட
இலங்கை வர்த்தக வங்கி
[illegible] கொழும்பு 1.
[illegible]

ஈரானிய ஷாவின் இறுதிச் சடங்குகள் இன்று கெய்ரோவில் நடைபெறும்

அரசு மரியாதையுடன் பூதவுடல் நல்லடக்கம்

கெய்ரோ, ஜூலை. 28

கெய்ரோவில் காலமான ஈரானிய ஷாவின் இறுதிச் சடங்குகள் இன்று செவ்வாய்க்கிழமை அரசமரியாதைகளுடன் எகிப்தில் நடைபெறும்.

அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள [illegible] திலுள்ள பழமையான [illegible] குப்பா பள்ளிவாசலில் [illegible] நல்லடக்கம் செய்யப்படும்.

எகிப்திய அரச குடும்பத்தினர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருக்கென ஏற்கனவே கட்டப்பட்ட கல்லறையிலேயே அன்னாரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் 7 நாள் துக்கம்

இதே வேளையில் ஷாவின் மறைவு குறித்து ஒரு வாரம் தேசிய துக்கம் அனுஷ்டிக்கப்படுமென்று அரசு அறிவித்துள்ளது. ( )

ஷா குடும்பத்திற்கு எகிப்தில் தொடர்ந்து புகலிடம்

எகிப்திய அதிபர் அறிவிப்பு

கெய்ரோ, ஜூலை 28

காலஞ்சென்ற ஈரானிய ஷாவின் குடும்பத்தினருக்கு தொடர்ந்தும் எகிப்தில் புகலிடம் அளிக்கப்படும்.

ஈரானிய ஷா எகிப்திலேயே காலமாகவேண்டுமென்பது ஆண்டவனின் விருப்பம் போலும்.

எகிப்தின் இக்கட்டான நிலையில் அதற்கு உறுதுணையாக இருந்த ஒரு உன்னத முஸ்லிம் தோழர் ஷா.

எகிப்திய அதிபர் அன்வர் சதாத் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஈரானிய ஷாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தவேண்டியது எகிப்திய மக்களின் கடமை என்றும் ஜனாதிபதி சதாத் தமது உரையில் குறிப்பிட்டார் ( )

பணயக்கைதிகளை மேலும் வைத்திருப்பதற்கு காரணமில்லை

நிக்சன் கருத்து

வாஷிங்டன், ஜூலை 28

ஈரானிய ஷா மறைந்து விட்டதால் அமெரிக்க ராஜதந்திரிகளை ஈரானில் தொடர்ந்தும் பணயம் வைப்பதற்கு எதுவித காரணமும் இல்லை.

இவ்வாறு முன்னாள் அமெரிக்க அதிபர் றிச்சார்ட் நிக்சன் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் திரு நிக்சன் ஈரானிய ஷாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பணயக் கைதிகளின் தலைவிதியை ஈரானிய ஆட்சிமன்றமே நிர்ணயிக்கும்

தெஹ்ரான், ஜூலை 28

ஈரானிய ஷா மறைந்தாலும் ஈரானிய மாணவர்கள் வசமுள்ள அமெரிக்க பணயக் கைதிகளின் தலைவிதியை ஈரானிய பாராளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்.

இவ்வாறு ஈரானிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஷாவின் மறைவால் ஈரான் அமெரிக்க உறவில் எதுவித தாக்கமும் ஏற்படாதென்றும் அவர் கூறினார். (இ)

ஷாவின் மறைவு

ஒரு சகாப்தத்தின் முடிவு

அமெரிக்கா செய்தி

வாஷிங்டன், ஜூலை. 28

ஈரானிய ஷாவின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவு.

ஷாவின் மறைவு குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

ஷாவின் மறைவை அடுத்து ஈரானில் மீண்டும் அமைதியும் ஸ்திரநிலையும் ஏற்படுமென்பது நம்பிக்கையையும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது (இ)

மூன்று இந்திய எதிர்க்கட்சிகள் இணையும்?

புதுடில்லி, ஜூலை. 28

பொதுவான திட்டம் ஒன்றின் அடிப்படையில் அரஸ் காங்கிரஸ், ஜனதா (ஜெ பி), லோக்தள் ஆகிய கட்சிகள் ஒரே கட்சியாக இணைவதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என அரஸ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி தாரகேஸ்வரி சின்ஹா தெரிவித்துள்ளார்.

புதிய கட்சிக்கு 'பாரத தேசிய காங்கிரஸ் சோஷலிஸ்ட்' என பெயர் சூட்டப்படவிருக்கிறது என்றும் அவர் கூறினார். [இ]

கார்ட்டரும் மனைவியும் தனியான செய்தி

வாஷிங்டன், ஜூலை, 28

அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரும் அவரது மனைவியும் ஈரானிய ஷாவின் மறைவு குறித்து தனிப்பட்ட முறையில் அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளனர். (இ)

கிராமியக்கலை வளர்ச்சி பெறும்

(மன்னார்)

இலுப்பைக்கடவை கிராமிய அபிவிருத்திச் சங்கம் 15 ஆயிரம் ரூபா செலவில் இலுப்பைக்கடவை கிராமத்தில் நிறுவிய திறந்த வெளியரங்கினை மன்னார் அரசாங்க அதிபர் திரு. எமிலஸ் பேர்னடோ திறந்து வைத்தார்.

கிராமப் புறங்களில் இது போன்ற திறந்த வெளியரங்குகள் நிறுவப்படுவதால் கிராமிய கலைகள் வளர்ச்சியடையும் என்று மன்னார் அரசாங்க அதிபர் தமது உரையில் கூறினார்.

மன்னார் கச்சேரி தலைமை நிர்வாக உதவி அரசாங்க அதிபர் திரு ஆறுமுகம், மாந்தை பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். (ச)

வானொலிப் பெட்டிகள் அன்பளிப்பு

(மன்னார்)

இலங்கை யுனிசெப் நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 18 வானொலிப் பெட்டிகளை வழங்கியுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளும், அனுராதபுரத்தில் உள்ள யுனிசெப் நிறுவன அதிகாரிகளும், மன்னார் கல்வி அதிகாரிகளுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு வானொலிப் பெட்டிகளை வழங்கினர். (ச)

இயக்குநர் தெரிவு

(மன்னார்)

முருங்கன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் திரு. எம். சந்தாப்பிள்ளை, திரு. பி. [illegible], திரு. ஏ. மருசலின். [ச]

சிவதீட்சை பெற்றனர்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் சைவ வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் தாமரைக்குளம் அம்பாள் ஆலயத்திலும் பரப்புக்கடந்தான் சித்தி விநாயகர் ஆலயத்திலும் 103 பேருக்கு அண்மையில் சிவதீட்சை செய்து வைக்கப்பட்டது. [ச]

விற்பனைக்கு கைவசமுள்ளன

முன்னேற்றப் பாதையில்
வெஸ்பா

நீரோடையான தோற்றம்
நீடித்த உழைப்பு பெற்றோலில் சிக்கனம் இம் மூன்று காரணங்களுக்காகவே இலங்கையிலும், உலகின் பல பகுதிகளிலும் விற்பனையில் மேம்பட்டு விளங்குகிறது.

வெஸ்பா ஸ்கூட்டர் மற்றும் மோபெட்ஸ் இவை இத்தாலியிலுள்ள பியாக்கியோவினால் தயாரிக்கப்பட்டவை.

இலங்கை பூராவும் வெஸ்பா விற்பனையாளர்களும் பராமரிப்பு நிலையங்களும் உள்ளன

ஏக ஏஜண்டுகள்:
கார்மார்ட் லிமிட்டெட்
424, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொலைபேசி: 96311-5

பிராவோ
வெஸ்பா மோபெட்ஸ்
50 CC ரூ. 5900/- விருந்து

வெஸ்பா ஸ்கூட்டர்
150 CC ரூ. 16990/-

CEYLINCO ADS

RAJAH JAFFNA Phone: 7180
Daily 10-30, a.m 2-3., 4-45, 7-15, & 9-45 p: m.
First it was — 'DRACULA' Then 'ZOLTAN HOUND OF DRACULA' Now From The Same Producers Another new kind of Masterpiece in Horror and Suspence.
RALPH BATES BARBARA JEFFORD in
LUST FOR A VAMPIRE
(Color - very strictly for adults)
(கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 9 45
சிவாஜி - விஜயா - ரஜனிகாந்த்
நடித்த
ஜஸ்டிஸ் கோபிநாத்
(ஈஸ்ட்மென் கலர்)

ஹரன் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30 9-30
3-வது ஜனத்திரள் வாரமாக
[illegible] ஓடிக்கொண்டிருக்கிறது.
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி, அசோகன்
பெரிய இடத்துப் பெண்
புத்தம் புதிய பிரதி

வெலிங்டன்
[illegible]
தினசரி 4 காட்சிகள்
[illegible]
6-ல் இருந்து
60 வரை

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சுஜாதா-[illegible]
ஞானக்
குழந்தை

SRIDHAR JAFFNA Last Few Days
Exorcist-11 The Heretic
Daily 5 Shows 10-30 am, 2-00, 4-30. 7-00 & 9-30 p m
From 1 8 80
RICHARD BURTON - ROGER MOORE
James Bond Fame)
RICHARD HARRIS - HARDY KRUGER
in
THE WILD GEESE
Long awaited action packed war Film

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10 30 1-30, 4-30, 7-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
புதிய பிரதி **அரச கட்டளை**

சாந்தி (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
9 30, 1-00, 4 00, 7 00, 9-45
காட்சிக்குக் காட்சி ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!
✱ கமலஹாசன் ✱ ஸ்ரீபிரியா ✱ மஞ்சுளா
✱ லதா ✱ ஸ்ரீகாந்த் ✱ ஜெய்கணேஷ் ✱ தீபா
✱ ரவிச்சந்திரன் ✱ முத்துராமன்
✱ சுருளிராஜன் ✱ எம். என் நம்பியார்
(போன்: 7642) - டிரிங் - டிரிங் - நீயா?
தன் காதலனைச் சுட்டுப்பொசுக்கிய ஆறு இளம் வாலிபர்களை பழிவாங்கத் துடித்த இச்சாரிப் பாம்பின் கதை
தென்னகத்தின் பல முன்னணி நட்சத்திரங்கள் ஒன்றிணையும் 'வெள்ளி விழா'' வண்ணச்சித்திரம்
இசை : சங்கர் கணேஷ் டைரக்ஷன்: துரை
நீயா?
ஈஸ்ட்மன் கலர் - ஜெமினி
வயதுவந்தவர்களுக்கு மிக உகந்த சித்திரம்
MORE SUITED FOR ADULTS

வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட இலங்கை சங்கீத சபையின் 60ம் ஆண்டுச் சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் கீழே தரப்படுகின்றன. ஏற்கனவே சிலரது பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. மிகுதி இங்கு தொடர்ந்து வெளிவரும்.

முதலாம் பகுதி

சாதாரண சித்தி இரண்டாம் பிரிவு

தயாளினி ஆறுமுகதேவர், பாட்டு, அருளானந்தம் உமா மகேஸ்வரன், பாட்டு, வைத்திலிங்கம் சுகுமார் பாட்டு, ரூபிற்று தர்ஷினி யோகராஜசிங்கம் பாட்டு-வீணை, விமலேந்திரன் சத்தியேந்திரா வீணை, பாலசரஸ்வதி நடராஜா வீணை, மீரா விமலேந்திரன் வீணை, நளினி இராஜரத்தினம் வீணை, கௌரிமனோகரி மாணிக்க நடராசா வீணை, சைலஜா கணபதிப்பிள்ளை பாட்டு, டொறின் சியாமளா மைக்கல் பாட்டு, சிசிலா கவிவாகனம் பாட்டு, ஜெயவதனி துரைசிங்கம் பாட்டு, அமிர்தாஞ்சலி கனகேந்திரன் பாட்டு, மணிமேகலை செல்லத்துரை பாட்டு, தர்ஷினி நவரட்ணம் பாட்டு, சூரியகுமாரி ஈஸ்வரத்தினம் வீணை, [illegible] பாட்டு, கௌரி குணரட்ணம் பாட்டு, புஷ்பாவதி சுப்பிரமணியம் வீணை, உஷாவதி நாகராஜா வீணை, துஷ்யந்தி திலகச்சந்திரன் பாட்டு, சோமசுந்தரம் சி. குமாரன் புல்லாங்குழல், சந்திரிகா ராசா பாட்டு-வயலின், சிவயோகநாயகி பரமசாமி பாட்டு, இந்துமதி வைரமுத்து வீணை, பிறிஸ்லின் ஜெயமலர் பிரான்சிஸ் பாட்டு, நிரஞ்சலா கந்தசாமி பாட்டு, மலர்மதி பிரான்சிஸ் வயலின், ரேணுகா நடராசா வீணை, தர்ஷினி குருமூர்த்தி வயலின், ஜெயரஞ்சினி பாலகிருஷ்ணன் பாட்டு, தாரணி தங்கவேலாயுதம் பாட்டு, இந்திரா திருநாவுக்கரசு பாட்டு, சர்வாம்பிகை திருச்சிற்றம்பலம் பாட்டு, ஜெகஜோதி திருநாவுக்கரசு பாட்டு, யோகேஸ்வரி சதாசிவம் பாட்டு, கலாநிதி பொன்னம்பலம் பாட்டு, உமா மகேந்திரன் பாட்டு வயலின், பிரேமலதா சுந்தரமூர்த்தி வீணை, நிலாம்பிகை விக்னேஸ்வரன் பாட்டு, ஜெகதாம்பிகை விக்னேஸ்வரன் பாட்டு, நந்தினி கந்தசாமி பாட்டு, இந்திராணி சோமசுந்தரம் பாட்டு, நந்தகுமாரி [illegible] பாட்டு, காத்தியாயினி தவநேசன் பாட்டு, சசிகலா இராசரத்தினம் பாட்டு, அன் சியாமளா விக்ஸ்ரின் பாட்டு, வாசுகி விக்னராஜா வயலின், சந்திரசேகரம் அகிலன் பாட்டு, சிவலோகநாதன் கணேசன் பாட்டு, அனுசூயா பாக்கியநாதன் பாட்டு, உஷா நாகலிங்கம் பாட்டு, கமலா துரைசாமி பாட்டு, சுஜாதா சிவசோதி பாட்டு

பாட்டு: பத்மலோசினி சுப்பிரமணியம், சுபாஷினி முத்துசாமி, சண்முகம் நந்தனான், சற்குணம் அரியரத்தினம், இராஜராணி சிவக்கொழுந்து, விஜயலட்சுமி குமாரசாமி சர்மா, முருகதாஸ் பரமநாதன், கலைவதனி சிவசுந்தரம், கலைவாணி முத்துக்குமாரு, சத்தியபாமா முத்துக்குமாரு, டொறத்தி மலினி டானியல், சுபோதினி பூபாலசிங்கம், மஞ்சுவாணி சொக்கலிங்கம், கல்யாணி கனகரத்தினம், சிவமதி சிவசுப்பிரமணியம், யசோதினி கனகலிங்கம், [illegible] அம்மை இராமசாமி, கமலவேணி சின்னத்துரை, மாலினி நாகலிங்கம், நித்தியானந்தி பன்மதராயன், சுமதி புவனேஸ்வரன், கலைச்செல்வி சின்னத்துரை, சு. ரஜினி நடராசா, தர்மசுந்தரி முத்துக்குமாரசாமி, திருமகள் ரவீந்திர சோதி, கீதிகா கணேசநாதன், ரூபிணி ரூபசிங்கம், வாசுகி இராசநாயகம், பரராஜசேகரம் ஜெயசங்கர், மஞ்சுளா பஞ்சாட்சரஐயர், ரோகிணி நடராசா. நிலானி சுந்தரலிங்கம், ஆரணி கதிர்காமநாதன், பூம்பொழில் பாலேந்திரா, தயாளினி நாகரட்ணம், நந்தினி இராமநாதன், அம்பிகைபதி ரவீந்திரன், குசாந்தி சிவசுப்பிரமணியம், ரஜினி நாகலிங்கம், திருமகள் மகேசன், ஜனனி ஏகாம்பரநாதன், செல்லத்துரை கமலநாதன், அருஞ்சோதி பொன்னம்பலம், [illegible] தையா சண்முகலிங்கம், (A) சண்முகசாமி ஆரூரன்

வயலின்: ஐயாத்துரை ரவிச்சந்திரன், திருமகள் செல்வநாயகம், தாரிணி சிவத்தம்பி, கமலேஸ்வரி கந்தையா.

வீணை: செய்மணி திருஞானசம்பந்தர், கலாஜோதி சுப்பையா, கல்யாணி இராஜலிங்கம், குமுதினி சுந்தரலிங்கம், தேவகி ஏகாம்பரநாதன்

பாட்டு-வயலின்: பிரமிளா இன்னாசிப்பிள்ளை.

(தொடரும்)

பெண்களுக்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளார்.

பெண்களின் கண்ணியத்தைக் காப்பாற்றும் மனிதநல நெறிகளைப் போற்றிக்காக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்தவே தாம் பதவிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளதாக திரு. ராஜ் நாராயண் தெரிவித்துள்ளார். (இ)

வஸ்லி [illegible]
தினசரி 6-30, 9-30
ராஜன்- கே.ஆர். விஜயா
தெய்வம்
(கலர்)

[illegible] (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - மாலினி
பைலட் பிரேம்நாத்
(புதிய பிரதி)

இன்றைய பலன்

[29-7-1980]
ஆடி மாதம் 14-ம் திகதி
[செவ்வாய்க்கிழமை]

மேடம்: பொறியியலாளர்களுக்கு நல்லதினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பமுண்டு. பெருவாரியாக தொழிலில் வெற்றி புரியும்.

இடபம்: புதிய பாதையொன்று உங்களை எதிர்நோக்கியுள்ளது. நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம். புத்திரர்களால் மனதுக்கு திருப்தி ஏற்படும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமுகமாக இருக்கும்.

மிதுனம்: விவசாயத்துறை கவலையைத்தரும் பண்ணை உற்சாகம் குன்றும் கால்நடைகள் விடயத்தில் கவனமாக இருக்கவும் சகல தொழிலாளர்களின் தொல்லைகளும் தோன்றி மறையும்

கடகம்: குடும்பத்தில் மகிழ்ச்சி செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும்.

சிங்கம்: குடும்பத்தில் ஒருவர் கேட்க நேரிடும் மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அனுகூலமாகலாம்.

கன்னி: மாணவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் தாய்வழி ஆதரவு சாதாரணமாகக் கிடைக்கும். வாகன நஷ்டத்துக்கும் இடமுண்டு.

துலாம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம் கல்வியிலும் அபிவிருத்தி தென்படும்.

விருச்சிகம்: கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். இருப்பிட மாற்றத்துக்கான சூழ்நிலைகளும் உருவாகலாம்.

தனு: எதிர்பாராத விதமாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடலாம். உங்கள் இரகசியங்களை எவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம் வேண்டும்.

மகரம்: வியாபார புத்தியினால் வெற்றிபெறலாம். கோபத்தை அடக்கினால் நிலைமை சீர்படும்.

கும்பம்: தகுதியின் முன்னேற்றமுண்டு எதிரிகள் பணிவர் எங்கும் வெற்றியுண்டு.

மீனம்: சிறிய விடயத்துக்கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குற்றங்குறைகள் தலையிடும் இடம் பெறும் பொறுமையைப் பேணவும்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

முத்தையா இல்லம் முதலிடம்

(பச்சிலைப்பள்ளி)

உடுத்துறை மகாவித்தியாலய வருடாந்த இல்லப்போட்டியில் முத்தையா இல்லம் முதலாமிடத்தையும், நவரத்தினம் இல்லம் இரண்டாமிடத்தையும், பொன்னையா இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன

ஆசிரியர் பி. ஏ. கிறனிஸ் லோரஸ் நன்றியுரை வழங்கினார்.

தற்கொலை

[யாழ்ப்பாணம்]

மந்தபுத்திக்கார இளைஞர் ஒருவர் நஞ்சருந்தி மரணமானார். இச்சம்பவம் பண்டத்தரிப்பில் நடைபெற்றது.

மரணமான அகிரன் சிறீதரன் [வயது 19] என்பவரது மரண விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

மரணமானவரின் சகோதரியின் கணவன் சுவக்கீன்பிள்ளை யேசுதாசன் சாட்சியமளிக்கையில், மரணமானவர் மந்தபுத்தியுடையவர் இவர் முன்பும் தற்கொலைசெய்ய எத்தனித்தார். நாங்கள் அப்போதெல்லாம் தடுத்துநிறுத்தியுள்ளோம் சம்பவதினம் அவர் தோட்டத்திற்குப் பாவிக்க வைத்திருந்த கிருமிநாசினியை அருந்திவிட்டார் என்று கூறினார்

சண்டிலிப்பாய் பொலிஸ் சார்ஜன்டின் திரு. [illegible] சாட்சியை ஆஜர்செய்தார்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். [லெ]

கடைசி 3 தினங்கள்
ராணி (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
✱ கமலஹாசன் (இரட்டைவேடத்தில்) ✱ ஸ்ரீதேவி
கல்யாண ராமன் (கலர்)
1-8 80 முதல்
படித்தால் மட்டும் போதுமா?

டில்கா
ரேடியோ
அன்
டீ.வி
டெக்னீஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோட்டர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப்பெட்டிகள்
எதுவானாலும்
உடன்சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

சவூதி — பிரிட்டன் ராஜதந்திர உறவு

லண்டன், ஜூலை 28

சவூதி அரேபியாவும் பிரிட்டனும் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள உள்ளதாக பிரிட்டன் வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

சவூதியில் இளவரசி ஒருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதை பிரிட்டனின் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து சவூதி பிரிட்டனுடனான உறவுகளைத் துண்டித்திருந்தது. (ஓ)

சட்டசபையை அவமதித்தவர்க்கு 3 நாள் சிறை

சென்னை ஜூலை 28

தமிழக சட்டசபையை அவமதித்த குற்றத்திற்காக இரண்டு நபர்களுக்கு மூன்று நாள் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

தமிழக சட்டசபையின் பார்வையாளர் கலரியிலிருந்து கோஷங்களை எழுப்பியவாறு துண்டுப்பிரசுரங்களை வீசியதாகவும் விசமுயன்றதாகவும் வேலன் நந்தகுமார் ஆகிய இருவர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (ஐ)

"அக்டோபர் 15-க்குள் சமத்துவவழிபாட்டுக்காக

169 இந்து ஆலயங்களும் திறக்கப்பட வேண்டும்"

சமூக - சகோதரத்துவ மாநாடு தீர்மானம்

(அரியாலை)

"அக்டோபர் 15-ந் திகதிக்குள் 169 இந்து ஆலயங்களும் சமூக சகோதரத்துவ வழிபாட்டுக்கு அனுமதியளிக்க வேண்டும். வழிபாட்டு உரிமை சகலருக்கும் வழங்கப்பட வேண்டும்"

இவ்வாறு கோரும் தீர்மானம் யாழ். பொது சன நூல் நிலைய சாம்சபா மண்டபத்தில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்பட்ட சமூக சகோதரத்துவ சமரச மகாநாட்டில் குழுநிலை கருத்துப் பரிமாறலின் பின் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒன்பது பேர்கொண்ட எட்டுக் குழுக்கள் தனித்தனி ஆலோசித்து தெரிவித்த ஆலோசனையின் பேரில் பின்வரும் தீர்மானங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

"அன்பு வழியில் ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டுக்கு இந்து அனுமதியளிக்காத ஆலயங்களில் சட்டத்தின் அமுல் செய்து சமத்துவவழிபாட்டினை நிலைநாட்டுவது".

"சமத்துவத்தினை ஆலயங்களில் நிலைநாட்ட வடபகுதியில் பணிபுரிகின்ற சகலதரத்து நிறுவனங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அறவழிப் போராட்டக்குழு அன்புடன் கோருகிறது" (ஓ)

திருநெல்வேலி இரட்டைக் கொலை:

இளைஞரின் பிணைமனு மீது 30-ம் திகதி விசாரணை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இரட்டைக் கொலைச்சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரைப் பிணையில் விடக்கோரித் தாக்கல் செய்யப்பட்ட பிணைமனு மீதான விசாரணை இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவுள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த நகரத்தினத்தையும் அவரது மனைவி சோதிமலரையும் கொலை செய்ததாகவும் மகள் தஞ்சித மலருக்குப் பலாத்காரம் விளைவித்ததாகவும் சந்தேகத்தின் பேரில் நடராசா இரத்தினம் என்பவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி சட்டத்தரணி ஆர். தவராசா யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணைமனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இப்பிணை மனுமீதான விசாரணை யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதவான் ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் இம்மாதம் 30-ம் திகதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் படவுள்ளது. (புலோ. அ)

ஒலிம்பிக் - ஹாக்கி

இந்தியாஸ்பெயின் இறுதி ஆட்டம்

மாஸ்கோ ஜூலை 28

ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் ஹாக்கிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று செவ்வாய்க்கிழமை ஸ்பெயினுடன் மோதுகிறது.

பெண்களுக்கான ஹாக்கிப் போட்டியில் 3 வது சுற்றில் இந்தியா செக்கோஸ்லாவியாவிடம் தோற்றுவிட்டது. (ஏ)

அபிவிருத்தி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.ஆர். ஜயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரின் பேச்சுகளை சுதந்திரக் கட்சியினர் தமக்கு ஆதாரமாகக்காட்டியதும் தான்.

என். எம். மின் வழியைப் பின்பற்றுகிறோம்

"என். எம் மின் வழியை நீங்கள் மறந்தீர்கள்; நாம் பின்பற்றுகிறோம்" என்றார் பிரதமர்.

"ஆட்சியில் அமர்ந்ததும் பேச்சு மறந்தது" என்றார் அநுரா பண்டாரநாயக்க.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோரை நீங்கள் வேலைநீக்கம் செய்தால் அத்தனை பேருக்கும் எமது ஆட்சியில் நாம் மீண்டும் வேலை வழங்குவோம் என்றார் திரு. மைத்திரிபால.

அவசரகால பிரகடனத்தில் அரசு ஒரு நாளேனும் பிந்தவுமில்லை; முந்தவுமில்லை என்றார் திரு. அத்துலத்முதலி.

அரசு சார்பில் பதிலளித்த அமைச்சர் காமினி திசநாயக்க அரசாங்கம் அதன் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளப்போவதில்லை. வேற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்றார்.

கடந்த அரச தொழிலாளர் இவரை நீக்கியது; மக்கள் இந்த அரசை நீக்கினார்கள். இப்போது நீங்கள் நீக்குகிறீர்கள். இதனை நினைவிலிருத்துங்கள் என்றார் திரு. சிவசிதம்பரம்.

அமைச்சர் மத்தியூ டெரம் ஜோருக்கல் என்ற இந்திய பத்திரிகையாளர் "புலி" ஒன்றுடன் தன்னுடைய சந்திப்பு என்று "சண்டே ஒப்சேவரி"ல் எழுதியிருந்த கட்டுரையை சபையில் வாசித்தபோது அவருக்கு விசிறி கொடுத்தது யார்? என்றார் நல்லூர் இவர்.

"நீங்கள் எழுதியதையா வாசிக்கிறீர்கள்?" என்றார் திரு. தர்மலிங்கம்.

திருமதி பண்டாரநாயக்கா சபையில் இல்லாதபோதும் இந்தியாவில் அவரது பத்திரிகையாளர் மாநாட்டு செய்திகள் குறித்து சபையில் அரசாங்கதரப்பில் பலருமே பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தபோது அமைச்சர் காமினி திசநாயக்க, தீர்மானத்தின் மீது பதிலளித்துப் பேசிக்கொண்டிருக்கையில் திருமதி ஸ்ரீமாவோ சபையுள் பிரவேசித்தார்.

கூச்சல்களை இப்போது வரவேற்றபடி வந்தமர்ந்த அவரைப் பார்த்து, "இந்தியா சென்று வந்ததும் அவருக்கு இராஜயோகம் அடிக்கப்போகிறது" என்றார் காமினி.

"நீர் என்ன ஜோஸியரா?", என்றார் ஸ்ரீமாவோ.

"இந்தியாவில் உங்களுக்கு சகல வசதிகளும் ஏற்பாடு செய்யும்படி எமது தூதரைப் பணித்திருந்தோம்" என்றார் காமினி.

"என் பின்னாலேயே அவர் சுற்றிக்கொண்டிருந்தார்!" என்றார் ஸ்ரீமாவோ.

தூக்கியவர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] அனுமதிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் திரு. ந. கிருஷ்ணராசா, க. முத்துக்குமார் ஆகியோரும், பொலிஸ் தரப்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு ரகுநாதனும், சட்டத்தரணி திரு ஆர். டி. இரத்தினசிங்கமும் ஆஜராகி வாதிட்டார்கள்.

பீடி இலையை கடத்திச்சென்ற

லொறியைப் பொலிசார் துரத்திப் பிடித்தனர்

[யாழ்ப்பாணம்]

சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பீடிப் புகையிலை மூடைகளைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

லொறி ஒன்றின் மூலம் மானிப்பாய் வீதிவழியாக பீடிப்புகையிலை கடத்தப்படுவதாக யாழ் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து யாழ் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர்களான திரு. சரத்குமார், திரு. திசநாயக்கா கான்ஸ்டபிள்கள் திரு. ரத்னாயக்கா, திரு. ஜெயவர்த்தனா ஆகியோர் லொறியைத் தேடி மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்திக்கு அண்மையில் பதுங்கியிருந்தனராம்.

ஓட்டுமடம் சந்திக்கண்மையில் குறித்த லொறி செல்வதைக் கண்டதும் பொலிசார் ஜீப் வண்டியில் துரத்திச் சென்றனராம். காங்கேசன் துறை துறைமுகச் சந்தியில் வைத்து பொலிசார் மேற்படி லொறியை மடக்கிப் பிடித்தனர்.

ஒரு லட்சத்து ஐயாயிரத்து அறுநூற்றி எழுபத்தெட்டு ரூபா பெறுமதிவாய்ந்த பீடிப் புகையிலை மூடைகளுடன் லொறியைக் கைப்பற்றிய பொலிசார் சாரதியுடன் சுங்க இலாகாவில் ஒப்படைத்தனர். சுங்கஇலாகாவினர் லொறியையும் பீடி புகையிலை மூடைகளையும் பறிமுதல் செய்ததுடன் சாரதிக்குப் பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார். [கோ-ஞ]

அதிகரிப்பு

(மன்னார்)

பேசாலையில் டோர்ச் பற்றிக்கும், ரூன்ஸ்டன் பற்றிக்கும் பிறிஸ்டல் வகைச்சிகரட்டிற்கும் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 3 ரூபா 75 சதமாக விற்பனை செய்யப்படும் ஒருகொத்து அரிசி 4 ரூபா 60 சதம் முதல் 5 ரூபா 35 சதம் வரை விற்பனைசெய்யப்படுகிறது. (ச)

வராத்துப்பளை

சீவல்தொழிலாளி கொலை விசாரணை ஆக. 1-ல்

[புலோலி]

வராத்துப்பளை சீவல் தொழிலாளி கொலைவழக்கு விசாரணை அடுத்தமாதம் முதலாம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் திரு கே. என். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

புலோலி தெற்கு, பல்லப்பையைச் சேர்ந்த சீவல் தொழிலாளி நாகன் வல்லிபுரத்தை வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் வீதியில் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகப் பருத்தித்துறைப் பொலிசார் அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன்; கந்தையா அச்சுவேலியைச் சேர்ந்த குலசேகரம் ஆகியோர் மீது குற்றம் சாட்டிப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே என் மகேசன் முன்னிலையில் அடுத்த மாதம் முதலாம் திகதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ)

தபாலில் செல்லும் தந்திகள்

(மன்னார்)

மன்னார் பகுதியில் தொலைபேசிச் சேவைகள் அடிக்கடி பழுதடைவதால் மக்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

இதே வேளை மன்னார் தபால் நிலையத்தில் அவசரத் தந்திகளைக் கூட ஒப்படைக்க முடியாதளவுக்கு மன்னார் பகுதியில் தந்திச் சேவை ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் தந்திகள் அனைத்தும் தபாலிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றன. (ந)

ஏழு பேர் பாதுகாப்பில்

[மன்னார்]

தலைமன்னார் துறைமுக சுங்க நிலைக்களஞ்சிய அறை கதவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டது.

இத்திருட்டு சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் 7 பேரை தலைமன்னார் பொலிசார் கைது செய்துள்ளனர். இத் திருட்டுக் கோஷ்டியினர் விசாரணைக்காகப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)

பிணை அனுமதி

(வல்வெட்டித்துறை)

இ. போ. ச. காரைநகர் டிப்போவைச் சேர்ந்த பஸ் ஒன்றினால் மோதப்பட்டு இறந்த 4 வயதுக் குழந்தையின் மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பஸ் சாரதியை 1000 ரூபா பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதவான் திரு. வி. கே. என். நீலகண்டன் அனுமதி வழங்கினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] வீதி 13-ம் இலக்க அச்சகத்தில் ஜூலை 29-ந் திகதி [illegible] வெளியிடப்பட்டது. Registered as a [illegible] Post Office Sri lanka under No. [illegible] 78, The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu", Phone: [illegible]